தலைப்பு 291 – கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 291 - கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் போதிய கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கு உரிய குறிப்புகளுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட தொகுப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்கு உரித்தான வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூலை 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்களில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு இலக்கம் 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டுக்காக

தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் பாராளுமன்றத்தின் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சு/திணைக்களம்/மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும்

மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல்,தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஆதன, இயந்திர உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(i)	ஹம்பாந்தோட்டைப் பிராந்திய பொறியியல் அலுவலகக் காணி கையளிப்பு சான்றிதழ் 2022 ஆம் ஆண்டின் போது திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், அது மதிப்பிடப்பட்டு அப் பெறுமதி நிதியல்லாத சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக திணைக்கள நிதியல்லாத சொத்துக்கள் குறித்த தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.	தேவையான நடவடிக்கைகளுக்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளன.	உரிமை திணைக்களத்திடம் உள்ள காணி, மதிப்பிடப்பட்டு நிதியல்லாத சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ii)	உரிமை திணைக்களத்தின் வசப்படுத்தப்பட்டிராத ஹெக்டேயர் 0.7941 அளவிலான மாத்தறை, மொறட்டுவை மற்றும் கொடவாயவில் உள்ள 03 காணிகள் ரூபா 42,007,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டு நிதி நிலைமைக் கூற்றில் நிதிசாரா சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிதிநிலைமைக் கூற்றில் நிதிசாரா சொத்துக்களின் பெறுமதி குறித்த தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.	03 காணித் துண்டுகளின் உரிமையை திணைக்களத்திற்கு மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கக் கோரி காணி ஆணையர் திணைக்களத்தின் தொடர்புடைய பிராந்திய அலுவலகங்களுக்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.	திணைக்களத்திற்குச் சொந்தமான நிதி அல்லாத நிதிசாரா சொத்துக்கள் மாத்திரமே நிதி நிலைமைக் கூற்றில் நிதிசாரா சொத்துக்களாககணக் கிடப்பட வேண்டும்.
(iii)	திணைக்களத்திற்கு உரித்தான 08 மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு மீளாய்வாண்டின் இறுதி வரை நிதிசாரா சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவற்றில் 02 மோட்டார் சைக்கிள்கள் மீளாய்வாண்டின் போது எந்த கணக்கீடும் மேற்கொள்ளப்படாது கைதவிர்க்கப்பட்டிருந்ததுடன் மற்றோர் மோட்டார் சைக்கிள் காணாமற் போயிருந்தது.	இயக்க நிலையில் அல்லாத மோட்டார் சைக்கிள்களும் திருத்தப்படக் கூடிய நிலையில் உள்ள மோட்டர் சைக்கிள்கள் திருத்தப்படுவதற்காகவும் திருத்தப்பட்டதை அடுத்து குறித்த அலுவலகங்களிற்கே மீள வழங்கப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.	திணைக்களத்திடம் உள்ள சகல மோட்டார் சைக்கிள்களும் மதிப்பிடப்பட்டு நிதிசாரா சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(iv)	செயற்திட்டச் செயற்பாடுகளிற்காக மொறட்டுவை மற்றும் நீர்கொழும்பு பிராந்திய பொறியியல் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த நான்கு இயந்திர உபகரணங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிசாரா சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நிதி நிலைமைக் கூற்றில் நிதிசாராச் சொத்துக்களின் பெறுமதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	இந் நான்கு இயந்திரங்களில் 03 இதுவரையிலும் சேவையில் இருந்து அகற்றப்பட்டுள்ளன. அகற்றலுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.	சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இயந்திரம் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படுவதற்கு ம் சேவையில் இருந்து அகற்றப்பட்ட இயந்திரம் திருத்தப்படுவதற்கோ அல்லது கைதவிர்ப்பு நடவடிக்கைகளிற்காக அனுப்பிவைக்கப்படுவ தற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(v)	மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நிதிசாராச் சொத்துக்கள் தொடர்பான ACA 06 படிவத்தின் படி, நிர்மாணிப்பு உபகரணங்கள் மற்றும் போக்குவரத்து உபகரணங்களின் இறுதி மீதி முறையே ரூபா 140,290,875 ஆகவும் ரூபா 141,940,000 ஆகவும்	திணைக்களப் புத்தகங்கள், CIGAS அமைப்பு மற்றும் ACA 06 திறைசேரி அச்சுப் பிரதிகளின் படி இறுதிப் பெறுமதி ரூபா 141,940,000 சரியானது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.	மூல ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு ஏற்ப சொத்துக்கள் கணக்கிடப்படுவதற்கா ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் படி, மேற்கூறிய பெறுமதிகள் முறையே ரூபா 139,500,000 ஆகவும் ரூபா 145,400,000 ஆகவும் இருந்தமையால் முறையே ரூபா 790,875 ஆனதும் ரூபா 3,460,000 ஆனதுமான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.		

(ஆ) நிதிசார் சொத்துக்கள்

கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான கட்டுநிதி தொடர்பான கூற்றில் (படிவம் ACA 3 இன் படி) தீர்க்கப்படாத கட்டுநிதி மீதியாக உள்ள ரூபா 1,023,108 ஆன தேர்தல் திணைக்களத்தில் இருந்து கிடைக்கப்பெற வேண்டிய காசு நிதிநிலைமைக் கூற்றில் நிதிசார் சொத்தாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் இறுதியில் மொத்த சொத்துக்களின் மீதியும் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய தேறிய தேறிய சொத்து மீதியும் அத் தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.	2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறாக படிவம் ACA 3 இல் காண்பிக்கப்பட்ட தீர்க்கப்படாத கட்டுநிதி மீதி பொதுத் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய பொறுப்பாகும். இதனால் நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது.	தேர்தல் திணைக்களத்தில் இருந்து பெற வேண்டிய தொகை சரியாகக் கணக்கிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தன.

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

கடந்த வருடத்தின் அறிக்கையின் பந்திக்கான தொடர்பு	நடைமுறைப்படுத்தப்படாத பரிந்துரை	இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு
1.6.1(அ) (i)	முன்னைய ஆண்டின் போது ஹம்பாந்தோட்டைப் பிராந்திய பொறியியல் அலுவலகம் உள்ள காணியின் உரிமைக் கையளிப்புச் சான்றிதழ் பெறப்பட்டிருந்த போதிலும் அது மதிப்பிடப்பட்டு	1.6.1(அ) (i)

		அப் பெறுமதி நிதிசாராச் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுதல்.	
	1.6.1(அ) (ii)	உரிமை திணைக்களத்தின் வசப்படுத்தப்பட்டிராத முன்னைய ஆண்டின் நிதிநிலைமைக் கூற்றில் நிதிசாராச் சொத்தின் கீழ் ரூபா 42,007,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்ட ஹெக்டேயர் 0.7941 அளவிலான மாத்தறை, மொறட்டுவை மற்றும் கொடவாயவில் உள்ள 03 காணிகளின் உரிமை திணைக்களத்திற்கு கையேற்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல்.	1.6.1(அ) (ii)
	1.6.1(அ) (iii)	திணைக்களத்திடம் உள்ள சகல மோட்டார் சைக்கிள்களும் மதிப்பிடப்பட்டு சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும்.	1.6.1(அ) (iii)
	1.6.1(அ) (iv)	செயற்திட்டச் செயற்பாடுகளிற்காக மொறட்டுவை மற்றும் நீர்கொழும்பு பிராந்திய பொறியியல் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த நான்கு இயந்திர உபகரணங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிசாரா சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.	1.6.1(அ) (iv)

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
லங்கா மினரல் சான்ட் லிமிடட் நிறுவனத்திற்கு 2017 ஆம் ஆண்டு முதல் 2020 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது வழங்கப்பட்டிருந்த வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட மண் கியூப் அளவிற்கும் மேலாக மண் அகழ்வு மேற்கொள்ளப்பட்டமை தொடர்பாக அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 79,369,500 ஆகும். இருப்பினும், அந்த நிறுவனத்தால் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையாக ரூபா 64,059,000 மாத்திரமே கணக்கிடப்பட்டிருந்தது. இருப்பினும், செலுத்த வேண்டிய மொத்த தொகையில் சுமார் 24 சதவீதமான ரூபா19,285,700 மாத்திரமே 2024 ஆம் ஆண்டின் இறுதி வரை செலுத்தப்பட்டிருந்தது. திணைக்களப் பதிவேடுகளின் படி, மேலும் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 60,083,800 தொகையை அறவிடப்படுவதற்கு எந்தவித எழுத்து மூல உடன்பாடோ அல்லது உடன்படிக்கையோ ஏற்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மேலதிக அகழ்வுகளுக்காக அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 79,369,500 தொகையில், ரூபா 64,056,000 தொகை 2024 ஜனவரி முதல் 5 ஆண்டுகளில் செலுத்துவதற்கு உடன்பட்டுள்ளது. அதன்படி, 2024 ஆம் ஆண்டில் ரூபா 19,285,700 தொகை செலுத்தப்பட்டுள்ளது. செலுத்த வேண்டிய மொத்தத் தொகைக்கும் ஒப்புக்கொள்ளப்பட்ட மொத்தத் தொகைக்கும் இடையே முரண்பாடு இருப்பதால், (ரூபா 15,310,500) அந்த நிலுவைத் தொகையைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிட்டு PA/LMSL/Pul&Mula/2023 ஆம் இலக்க 2024.04.25 ஆம் திகதி ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.	அறவிடப்பட வேண்டிய பணம் தொடர்பாக எழுத்து மூல உடன்பாடோ அல்லது உடன்படிக்கையோ ஏற்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.2 செலவின முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
மீளாய்வாண்டின் வாகன பராமரிப்பு, மென்பொருள் பராமரிப்பு, கட்டிட பராமரிப்பு மற்றும் புனரமைப்பிற்காக ஒதுக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட தேறிய ஒதுக்கீட்டில், முறையே ரூபா 4,194,946 அல்லது 49 சதவீதம், ரூபா 733,246 அல்லது 73 சதவீதம் மற்றும் ரூபா 908,291 அல்லது 61 சதவீதம் எஞ்சியிருந்தன. எவ்வாறெனினும், வாகனக் குழுவில் உள்ள 9 வாகனங்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் தொடர்ந்து உள்ளமை, அனுமதிப்பத்திர வருமான மென்பொருளுக்கான வருடாந்தக் கட்டணம் செலுத்த உள்ளமை, கணினிகளுக்கு வைரஸ் பாதுகாப்பு தேவையுடன் மேலும் பழுதுபார்க்கத் தேவைப்படும் கட்டிடங்கள் இருக்கையில் இந்த நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	தற்போதுள்ள வாகனங்களுக்கு சாரதிகள் இன்மையால், ஒவ்வொரு நாளும் அனைத்து வாகனங்களையும் இயக்க முடியாதுள்ளமையால் வாகன சேவைக்கிடப்படும் எண்ணிக்கை குறைவாக உள்ளமை, திணைக்களத்தின் அனுமதிப்பத்திர வருமானம், மென்பொருளுடன் தொடர்புடைய வருடாந்தக் கொடுப்பனவுகள் இதுவரை செலவு விடய இல. 2509 (2) மேற்கொள்ளப்பட்டுள்ளமை, கோடவாயா விடுமுறை விடுதியின் முழுமையான திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் இதற்காக போதுமான ஏற்பாடுகள் இல்லாததன் காரணமாக எதிர்வரும் பணிகளை மேற்கொள்ள முடியாமையால் ஒதுக்கீடுகள் எஞ்சியுள்ளன.	துல்லியமான மதிப்பீடுகளின் கீழ் ஒதுக்கீடுகளுக்கு விண்ணப்பிக்கவும், பெறப்பட்ட ஒதுக்கீடுகளை உகந்த முறையில் பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் உருவாதல்

கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட வருட இறுதியிலான பிணைப்புகள் மற்றும் பொறுப்புகளின் அறிக்கையின் படி எந்தவித பிணைப்புகளோ அல்லது ள் அல்லது பொறுப்புகளோ அறிக்கையிடப்பட்டிராத போதிலும் திறைசேரியின் அச்சீட்டு பிரதியின் எஸ்ஏ 92 இன் படி 3 செலவின விடயங்களில் மொத்தம் ரூபா 218,073 பொறுப்புகள் காணப்பட்டதுடன் திணைக்களத்தின் 2025 ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாத உறுதிச்சீட்டுக்களின் ஆய்வின் 10 செலவின விடயங்களுக்கு மொத்தம் ரூபா 3,818,244 தொகைக்காக 2024 ஆம் ஆம் ஆண்டின் செலவினத்திற்காக 2025 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 4,036,317 தொகையான அறிக்கையிடப்படாத பொறுப்புகள் ஏற்பட்டிருந்தன.	2024 இல் நிலவிய பொறுப்புகள் CIGAS அமைப்பில் உள்ளிடப்பட்டிருந்த போதிலும், கணக்கீட்டில் ஏற்பட்ட பிழை காரணமாக, பொறுப்புப் பதிவேட்டின் இறுதிக் கணக்கில் பொறுப்புகளை உள்ளிட முடியவில்லை. தொடர்புடைய உறுதிச்சீட்டுக்கள் கணக்கீட்டுக் கிளைக்கு அனுப்பிவைக்கப்பட்டிராததன் காரணமாக இச் செலவின விடயங்களுக்கு உரிய பிணைப்புகள் மற்றும் பொறுப்புகளின் பதிவேட்டில் உள்ளடக்க இயலாதிருந்தது.	வருடத்திற்குத் தொடர்பான அனைத்து பிணைப்புகளும் பொறுப்புகளும் சரியாக பதிவுசெய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ)	நிதிப் பிரமாணம் 94(1) இற்கு முரணான வகையில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 செலவின விடயங்களிற்கு மதிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டு சேமிப்பிற்கு மேலாக மொத்தம் ரூபா 2,473,462 தொகையான பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.	புயணச் செலவுகளுக்கான ஏற்பாடுகள் போதாமை காரணமாக ஏற்பாடுகளைப் பார்க்கிலும் பிணைப்புகளுக்கு உட்பட நேர்ந்துள்ளமையைக் குறிப்பிடுகின்றேன்.	பிரமாணங்களின் பிரகாரம் செலவினங்கள் மட்டுப்படுத்தப்படுவதற்கும் ஏற்பாட்டு எல்லைக்குள் பொறுப்புகள் ஏற்படுத்தப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட ஏற்பாடுகளின் பயன்பாடு

கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
அம்பாறை மாவட்டத்தில் கல்முனை Groyne field கட்டமைப்பை நிர்மாணிப்பதற்காக ரூபா 46.99 மில்லியன் தொகையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, இது 2024 ஆகஸ்ட் 01 முதல் டிசம்பர் 31 வரையான 5 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கான நிதி ஒதுக்கீடு ஜனாதிபதி செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும் அதன் பௌதீக செயற்திறன் 40 சதவீத மட்டத்திலும், அதன் நிதி செயற்திறன் ரூபா 0.26 மில்லியன் என்ற மிகக் குறைந்த மட்டத்திலுமாக, 16.17 சதவீத மிகக் குறைந்த மட்டத்தில் இருந்தது.	பதில் எதுவும் வழங்கப்படவில்லை.	செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு குறிப்பிட்ட செயற்பாடுகள் காலக்கெடுவிற்குள் நிறைவேற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.5 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி, திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாடு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வை மேற்கொண்டு இதன் படி முறைமையை ஆக்கபூர்வமாக நடைமுறைப்படுவத்துவதற்கு அவசியமான மாற்றங்களை மேற்கொள்ளப்பட வேண்டும்	அரசாங்க கணக்காய்வு பிரிவு மற்றும் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் எடுத்துக் காட்டப்பட்ட கணக்காய்வு அவதானிப்பைக் கவனத்திற்கொண்டு அவற்றைத் திருத்திக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன்.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி, நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எனவும் அம் மீளாய்வுகள் எழுத்து மூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அத்தகைய மீளாய்வு மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளிற்கு இணங்கியிராத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விபரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளது.

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	அவதானிப்புகள் பெறுமதி ரூபா	அவதானிப்புகள் இணக்கமின்மை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கடலோரப் பாதுகாப்புச் சட்டத்தின 31(4) ஆம் பிரிவு	-	2015 முதல் 2024 டிசம்பர் 31 வரை உடைத்து அகற்றுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த அங்கீகரிக்கப்படாத நிர்மாணிப்புகளை அகற்றுவதற்காகத் திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 3,492,801 தொகையை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் சரியானவை. கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறிய நபர்களுக்காக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.	அங்கீகரிக்கப்படாத நிர்மாணிப்புகள் தொடர்பாக திணைக்களத்தால் ஏற்கப்பட்ட செலவை, சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து விரைவாக அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இல. 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி		திணைக்களத்தின் 28 வாகனங்கள் மற்றும் 18 இயந்திர உபகரணங்கள் தொடர்பாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	எரிபொருள் பரிசோதனைகளை முறைப்படி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது..	சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் 2020 நவம்பர் 09 ஆம் திகதிய TOD/REV/M3/02/01	-	திறைசேரி, செயற்பாட்டுத் பணிப்பாளர் நாயகம் கணக்கீட்டு உத்தியோகத்தராகச் செயற்படும் வருமானக் குறியீட்டின் கீழ் சேகரிக்கப்பட்ட வருமானம் குறித்து உரிய கணக்கீட்டு உத்தியோகத்தரால்	2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் குறித்த ஐந்து மீன்பிடித் துறைமுகங்களில் இருந்து மணல் அகற்றுவதற்கான உரிமங்களை வழங்குவதற்காக திணைக்களத்திற்கு	நிலுவையான வருமான அறிக்கையை சரியாக சமர்ப்பிப்பதற்குநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஆம் இலக்கக் கடிதம்	அரையாண்டு வருமானம் தொடர்பான நிலுவை வருமான அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஐந்து மீன்பிடித் துறைமுகங்களில் இருந்து மணல் அகற்றுவதற்கான உரிமங்களை வழங்குவதற்காக ரூபா 8,268,292 வருமான நிலுவைத் தொகை தெரிவிக்கப்படவில்லை, பதிலாக, வருமான நிலுவைத் தொகை எதுவும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 9,695,500.00 தொகையில் 2024.12.31 இல் உள்ளவாறு ரூபா 3,681,624.96 அறவிடப்பட்டிருந்ததுடன் மீதமுள்ள தொகையான ரூபா. 6,627,479.52 ஐ அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில், நிலுவை வருமானத்தைக் காண்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 பிரதான பணிகளும் செயற்பாடுகளும்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	1981 இன் 57 ஆம் இலக்க கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 7 (உ) மற்றும் 12 ஆம் பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டின் ஆலோசனைச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட கரையோர முகாமைத்துவ திட்டத்தின் 6.4.6 பந்தியின் படி. ஆலோசனைச் சபைக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கான அதிகாரம் இல்லாததுடன் பொது நடவடிக்கைகளிற்காகவே அன்றி கரையோரப்பகுதிகளில் இருந்து விலகி தனியார் நடவடிக்கைகளுக்காக அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக பரிந்துரை வழங்கப்படுவதற்கான அதிகாரம் இல்லை. மேலும், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வேறேதேனும் மாற்றீடொன்று இல்லாத சந்தர்ப்பத்தின் போது மாத்திரம் நிர்மாணிப்புகள் அல்லாத “ ஒதுக்கப்பட்ட பகுதி” பொது மக்களின் தனிப்பட்ட அபிவிருத்தி நோக்கங்கள் தவிர்ந்த பொது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மாத்திரம் கரையோர கரைப் பகுதி விடுவிக்கப்படுவதற்கு அங்கீகரிப்பது திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு மேற்கொள்ள முடியும். எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட 04 ஆலோசனைச் சபை கூட்டங்களின் போது	கடலோர வலயத்தில் தடைசெய்யப்பட்ட பகுதியில் எந்தவொரு அபிவிருத்திச் செயற்பாடுகளும் இன்றி பேணப்படுவது ஏற்ற முகாமைத்துவ நடவடிக்கையான போதிலும் கரையோரப் பகுதியில் காணிப் பயன்பாடு, அதிக மக்கள் தொகை, காணிகளின் துண்டுகளின் அளவு மற்றும் மண்ணரிப்பின் விரைவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இது எப்போதும் சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல, எனவே மிகவும் தளர்வான முகாமைத்துவ உபாயம் தேவைப்படுகிறது. கரையோர பகுதியில் உள்ள பல்வேறு தொழில்களில் பெரும் சதவீதம் இந்த கரையோர நகரங்களில் அமைந்துள்ளது. இவற்றிலும், சுற்றுலாத் துறை மற்றும் மீன்பிடித் தொழில் இந்த கரையோரப் பகுதியுடன் நேரடியாக தொடர்புடையது. நாட்டின் வளர்ச்சிக்காக அவ்வப்போது ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் எடுக்கும் பல்வேறு கொள்கை ரீதியான முடிவுகள் காரணமாக, கரையோரப் பகுதியில் நேரும் அபிவிருத்தி	தொடர்புடைய விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	ஒதுக்கப்பட்ட பகுதிகளில் நிர்மாணிப்புகளுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை எனக் குறிப்பிட்டு தனியார் விண்ணப்பங்களுக்கு 343 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதால், அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் கரையோர வலய அபிவிருத்தி நடவடிக்கைகளின் மூலம் நேரும் பாதகமான தாக்கங்களைத் தடுப்பது அல்லது குறைப்பதற்கான நோக்கம் எய்தப்பட்டிருக்கவில்லை.	நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையிலும் தொடர்புடைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வேறு மாற்றீடு இல்லாத சந்தர்ப்பங்களில், நியாயமான காரணிகளைக் கருத்தில் கொண்டு, அதன் மூலம் கரையோரப் பகுதியில் ஏற்படும் பாதகமான தாக்கத்தைக் குறைத்து ஆலோசனைச் சபை கரையோரப் பகுதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பரிந்துரைகளை வழங்கியிருந்தது. எவ்வாறெனினும், கரையோரப்பகுதியில் கரையோரப் பாதுகாப்பு எல்லைக்குள் உள்ள பழைய கட்டிடங்களைத் திருத்துவதற்காக நியாயமான அடிப்படையில் கரையோரப்பாதுகாப்பு ஆலோசனைச் சபையின் பரிந்துரையின் கீழ் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்காக எதிர்ப்பு இல்லை என குறிப்பிட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக கரையோரப் பகுதியும் கரையோர வள முகாமைத்துவ திட்டத்தில் இதற்குத் தேவையான வழிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.	
(ஆ)	மிரிஸ்ஸவின் பண்டாரமுல்ல பகுதியில் 120 மீட்டர் நீளமுள்ள சுகாதார நலன் நடைவளிப்பாதையொன்றை அமைப்பதற்காக கரையோரப் பாதுகாப்பு சுவரை அமைப்பதற்காக மீளாண்வாண்டின் போது ரூபா 7 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், சுகாதார நலன் நடைவளிப்பாதையொன்றை அமைப்பது கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் நோக்கங்களுக்குப் புறம்பான செயலாகக் காணப்பட்டது.	கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.	கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களச் சட்டத்தின் நோக்கங்களின் படி, நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.2 பணிகள் மேற்கொள்ளப்பட்டிராமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
2024 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டத்தின் படி, ஆண்டின் போது ரூபா 9.5 மில்லியன் ஒதுக்கீட்டின் கீழ், பூர்த்தி செய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த மாத்தறை மடிஹா பகுதியில் கரையோரப் பாதுகாப்பு கட்டமைப்பின் கட்டுமானம் மற்றும் 2021 முதல் நடைபெற்று வந்த திருகோணமலையில் நிரந்தர தாவரக் கோடு குறிப்பது குறித்த கணக்கெடுப்பு போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	எந்தக் கருத்தும் தெரிவிக்கப்படவில்லை.	செயல் திட்டத்தில் கூறப்பட்டுள்ள படி, குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தொடர்புடைய பணிகளை நிறைவேற்ற வேண்டும்.

4.3 எதிர்பார்க்கப்பட்ட நலனைப் பெற்றிராமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ) 2012 முதல் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை இலங்கையின் கரையோரப் பகுதிகளில் பின்னடைவுப் பகுதியில் அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்ட கட்டுமானங்களுக்காக தகர்வுக்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட 3,039 நிர்மாணிப்புகளில் 2,825 அகற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொண்டுள்ளேன். சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் சரியானவை	முறையாக திட்டமிடப்பட்ட திட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களை தாமதமின்றி அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட செயற்திறன் அறிக்கையின் படி, மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த ரூபா 52.52 மில்லியன் மதிப்பீட்டிலான புத்தளத்தின் வடக்கு பகுதியில் உடப்புவவில் 200 மீட்டர் நீளமுள்ள ஒரு தடுப்புச்சுவர் கட்டுமானம், காலி, ஹதபலானையில் 30 மீட்டர் நீளமுள்ள ஒரு க்ரோய்ன் கட்டமைப்பின் கட்டுமானம் மற்றும் அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில், விஸ்கி பாயிண்டில் ஒரு ஜியோபேக் க்ரோய்ன் கட்டமைப்பின் கட்டுமானம் என 03 திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 20 சதவீதத்திற்கும் குறைவாகவும், நிதி முன்னேற்றமும் 12 சதவீதத்திற்கும் குறைவாகவும் இருந்தது.	எந்த கருத்தும் தெரிவிக்கப்படவில்லை	சேய நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படி, தொடர்புடைய பணிகள் குறித்த காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ) 2005 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு, கணக்கில் பதிவு செய்யப்படாத திணைக்களத்திற்குச் சொந்தமான ஒரு மோட்டார் சைக்கிள் காணாமல் போயிருந்தது. மேலும், குறித்த மோட்டார் சைக்கிளுக்கு 2015 ஆம் ஆண்டின் பின்னர் வருமான அனுமதிப்பத்திரம் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் காணாமற் போனமை தொடர்பாக இந்த அறிக்கை வெளியிடப்பட்ட திகதி வரை எந்தவித விசாரணையும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	தொடர்புடைய மோட்டார் சைக்கிள் தற்போதுள்ள இடத்தைக் கண்டறிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களின் படி, மோட்டார் சைக்கிளுக்கான வருமான அனுமதிப்பத்திரம் இறுதியாக 2014 ஆம் ஆண்டில் பெறப்பட்டுள்ளது. இந்த மோட்டார் வாகனம் 2006.11.11 அன்று திணைக்களத்தில் பணியாற்றிய ஒரு அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ளது, மேலும் அவர் மோட்டார் சைக்கிளை கையேற்றதாக அவர் ஆவணங்களிலும் கையொப்பமிட்டுள்ளார். தற்போது திணைக்களத்தின் சேவையை விட்டு விலகியுள்ளார்.	அலட்சியமாகவும் கவனக்குறைவாகவும் செயல்பட்ட அதிகாரிகள் மீது தாபன விதிக் கோவையின் II ஆம் பகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் படி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதி ரூபா 11.9 மில்லியனான “வால்வோ எக்ஸ்கவேட்டர்” இயந்திரம், 2019 செப்தெம்பர் முதல் காலி அலுவலக வளாகத்தில் உக்கலடைந்த நிலையில் உள்ளது. மேலும் 2021 இல் தலைமை அலுவலகத்திற்கு அப்புறப்படுத்தலுக்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த இயந்திரத்தை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அப்புறப்படுத்த வேண்டிய வாகனத்தை அப்புறப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரும் நிலையில், PD – 1046 வாகனத்தின் உரிமையை கையகப்படுத்துவதற்குத் தேவையான படிவங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மேலும் இது தொடர்பாக தகவல்களைக் கோரி 26.10.2023 அன்று ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.	இயந்திரங்கள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டு தேவையான பழுதுபார்ப்பு மற்றும் அப்புறப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(இ) மொரட்டுவ பிராந்திய அலுவலகத்தில் உள்ள Hundai 320 LC - 9 Crawler Excavator இயந்திரம் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையால் இயங்க முடியாத நிலைக்கு உட்பட்டிருந்தது, எனினும், இது குறித்து பொறுப்பான அதிகாரிகளின் கவனம் ஈர்க்கப்பட்டிருக்கவில்லை.	சம்பந்தப்பட்ட பழுதுபார்ப்புகளை மேற்கொள்ளுமாறு கோரி அரசாங்கத் தொழிற்சாலைகள் திணைக்களத்திற்குக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.	சரியான மேற்பார்வையுடன் இயந்திரங்களை திறம்பட பயன்படுத்துவதில் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

4.5 முகாமைத்துவ நலிவுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	உனவட்டுன பகுதியில் தனியார் நிறுவனத்திற்குச் சொந்தமான ஹோட்டல் நிர்மாணிப்பு தொடர்பான ஆய்வின் போது, காலி மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 16813 ஆம் இலக்க பாகப்பிரிவு வழக்கின் படி 1924 பெப்ரவரி 09 அன்று பிரிக்கப்பட்ட 9A வரைபுத்திட்டத்தின் 06 நிலத் துண்டுகளில் சேர்க்கப்பட்டுள்ள காணியின் பரப்பளவு 122.69 பேர்ச்சஸ் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2018 ஏப்ரல் 30 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட 1154 ஆம் இலக்க வரைபுத்திட்டத்தின் படி, குறித்த காணி 06 காணித் துண்டுகளின் பரப்பளவு 156.11 பேர்ச் ஆனமையால் 33.42 பேர்ச்சினால் காணியின் அளவு அதிகரித்திருந்தமை கடற்கரை மண்ணிடப்பட்டு மீட்டெடுக்கப்பட்டுள்ளதா என்பது குறித்த சர்ச்சை நிலை ஏற்பட்டுள்ளது.	சமர்ப்பிக்கப்பட்டுள்ள காலி மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள 16813 ஆம் இலக்க பாகப்பிரிவு வழக்கின் படி சமர்பிக்கப்பட்டுள்ள (16813 -1924 மற்றும் 1154 - 2018 ஆம் இலக்க) வரைபுத்திட்டங்களின் படி ஒரே பார்வையில் கடற்கரையை மணலிடப்பட்டு மீட்டெடுப்பாகக் காணப்படுவதுடன் இந்தத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு முதல் (1983) எந்தவொரு பாரிய அளவிலான பௌதீக மீட்புப் பணிகள் தொடர்பாக பதிவாகவில்லை, மேலும் பதிவாகியுள்ள அபிவிருத்திப் பணிகள் மற்றும் மீட்டெடுப்பு களுக்காக சட்டத்தின் படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், அந்த கால இடைவெளி 90 ஆண்டுகளுக்கும் மேலானதுடன் இத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட திகதியில் வரையில் கூட ஏறத்தாழ 60 ஆண்டுகளுக்கு அண்மித்த காலப்பகுதிக்குள் கரையோரப்பகுதி மேற்குறித்த வகையில் மணல் நிரப்பலும் பௌதீக ரீதியாக (அனுமதியற்ற) நிரப்புதல்கள் நேர்ந்துள்ளதுடன் அந்த காணியில் படிப்படியாக அரிப்பு ஏற்பட்டுள்ளது.	கரையோரம் பேணல் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	மேற்குறித்த காணியின் முன்னாள் உரிமையாளர் கடற்கரையிலிருந்து சுமார் 18.3 மீட்டர் தொலைவில் சட்டவிரோதமாக அமைத்து வந்த 21.9 அடி நீளமும் 05 அடி உயரமும் கொண்ட சுவரை சட்டத்தின் 31(2) ஆம் பிரிவின் கீழ் இடித்து அகற்றுவதற்கு 2016 நவம்பர் 09 ஆம் திகதிய கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதனைக் கருத்திற்கொள்ளாது ஹபராதுவ பிரதேச செயலாளரின் கடிதத்தின் மூலம் கரை அரிப்பைத் தடுப்பதற்காக கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் பரிந்துரையில் அணை	இங்கு குறிப்பிடப்பட்டுள்ள காணியின் அனுமதிக்கப்படாத அணை, 2016 நவம்பர் மாதம் வழங்கப்பட்டிருந்த தகர்த்து அகற்றுதல் உத்தரவுகளின் அடிப்படையில் அகற்றப்பட்டுள்ளது. 2018.04.26 அன்று வரையப்பட்ட வரைபுத் திட்ட இல. 1154 இன் படி, அரசாங்கப் பங்குகள் உட்பட, காணி ஒரு தனியார் ஹோட்டல் நிறுவனத்திற்கு விற்கப்பட்டுள்ளது. இந்த காணியை நிரப்பியமை மற்றும் நிரப்பியதன் காரணமாக அரசாங்க பங்கை அளவிட்டு ஒதுக்குவதற்காக, இந்தத் திணைக்களம், ஹபராதுவ பிரதேச	கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

கட்டப்படுவதற்காக காணியின் தற்போதைய உரிமையாளருக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.	செயலாளரினூடாக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பேரில், நில அளவைத் திணைக்களத்தால் 2022.02.14 ஆம் திகதிய CL/SQB/2022/07 ஆம் இலக்க கணக்கெடுப்பு அறிக்கையை இந்தத் துறை தயாரித்துள்ளது. அதன்படி, அதுவரையில் தற்போதைய உரிமையாளருக்கு குறித்த காணிக்கு அருகாமையில் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிப் பகுதியைப் பயன்படுத்துவதற்கு பிரதேச செயலாளரால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. நிகழ்ந்த காலநிலைச் சீர்கேடு காரமாக அரசாங்கத்திற்குச் சொந்தமான இந்தக் காணியின் ஓர் பகுதி அரிப்பிற்கு உட்பட்டிருந்தது. அதைத் தடுப்பது கடமையாக இருந்த போதிலும், இதற்காக திணைக்களத்திற்கான ஏற்பாடுகள் இல்லாத நிலையில், மேற்குறித்த நிறுவனத்தால் கரையோரப் பாதுகாப்பு அணைக்காக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையைக் கருத்திற்கொண்டு, இதற்காக 2022.01.19 ஆம் திகதிய CCCRM/PM/3992 ஆம் இலக்க அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை எய்துதல்.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
பாதகமான மனித தாக்கங்களைத் தடுப்பதற்காக கடல் மற்றும் கடலோர சுற்றுச்சூழல் அமைப்புகளை நிலையான முறையில் பாதுகாப்பது என்ற இலக்கின் கீழ் பாதிக்கப்பட்ட பகுதிகளை அடையாளம் காணவும், நிர்வகிக்கவும், பாதுகாக்கவும் 70 ஹெக்டேர் மணல் திட்டுகள், சதுப்பு நிலங்கள் மற்றும் உப்பு சதுப்பு நிலங்கள் மற்றும் உணர்திறன் வாய்ந்த சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாக்கும் இலக்கு அடையப்படவில்லை.	எந்த கருத்தும் தெரிவிக்கப்படவில்லை.	திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் செயற்படுத்தி நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைய வேண்டும், அவ்வாறு செய்வதற்கு சாத்தியமில்லாத சந்தர்ப்பங்களில், திட்டங்கள் திருத்தப்பட்டு அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

6. மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தில் 541 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில், 150 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் இதில் சிரேஷ்ட நிலையில் 15 பதவிகளும் 75 மூன்றாம் மற்றும் இரண்டாம் நிலைப் பதவிகளும், 60 ஆரம்ப நிலைப் பதவிகளும் உள்ளடங்கியிருந்தன. அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பதவிகள் 90 ஆகக் காணப்பட்ட போதிலும் உள்ளபடியான எண்ணிக்கை 104 ஆகக் காணப்பட்டமையால் 14 மிகையாகக் காணப்பட்டன. மேலும் ஒரு உத்தியோகத்தரின் படி மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்த 3 சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலைப் பதவிகளில் எந்த உத்தியோகத்தரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் படி, உண்மையாக நிலவிய பதவிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் உத்தியோகபூர்வ கடமைகளை மேற்கொள்ளும் இயலுமை குறித்து மீளாய்வு செய்து தேவைப்பாட்டின் படி திருத்தங்கள் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பிரதிப் பணிப்பாளர் மற்றும் உதவி பணிப்பாளர் (துறை சார்ந்த) பதவிகளுக்கான 06 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பிற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது வரையில் திணைக்களத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட 541 ஊழியர்களில், உண்மையாக உள்ள எண்ணிக்கை 404 ஆகும். மேலும், வெற்றிட எண்ணிக்கை, சிரேஷ்ட நிலையில் 16 வெற்றிடங்களும், மூன்றாம் நிலையில் 03 வெற்றிடங்களும், இரண்டாம் நிலையில் 57 வெற்றிடங்களும் ஆரம்ப நிலையில் 61 வெற்றிடங்களுமாக மொத்த வெற்றிட எண்ணிக்கை 137 ஆகக் காணப்பட்டது.	தேவையான அங்கீகாரத்தைப் பெற்று ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கோ அல்லது நிலவும் பதவியணியினை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான இயலுமை தொடர்பாக மீளாய்வை மேற்கொண்டு பதவியணி எண்ணிக்கையைத் திருத்திக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.